சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 63/2019

பெயர் திருமதி. கௌரி நாள்.07.08.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கை என் தகப்பனார் தாக்கல் செய்தார். பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆதியில் வழக்குச் சொத்து வேதாசலம் என்பவருக்கு உரிமையானது. பொன்னுசாமியின் மகன்கள் வேதாசலம் மற்றும் அரிகிருஷ்ணன். வேதாசலம் என் பெரிய தாத்தா என்றால் சரிதான். அரிகிருஷ்ணன் என்னுடைய தாத்தா என்றால் சரிதான். வேதாசலம் மகன் செல்வராஜ் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களை செல்வராஜ் மற்றும் அவரது பிள்ளைகள் விற்றுவிட்டனர். செல்வராஜூக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. 10ம் பிரதிவாதிக்கு செலவராஜ் மற்றும் அவரது மகன்கள் கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். செல்வராஜ் தானாக கிரயம் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், மதுவை அருந்தியதால் அவரிடம் இருந்து எழுதி வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. செல்வராஜ் 10ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயத்திற்கான தொகைகள் இதுவரை பெறவில்லை என்றால் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்துக்களில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.